# ஆரோக்கியமான உபதேசம்

இந்த கடைசி நாட்களில்



# ஆரோக்கியமான உபதேசம்

''பின்பு, அவர் ஒலிவமலையின்மேல் உட்கார்ந்திருக்கையில், சீஷர்கள் அவரிடத்தில் தனித்துவந்து: இவைகள் எப்பொழுது சம்பவிக்கும்? உம்முடைய வருகைக்கும், உலகத்தின் முடிவுக்கும் அடையாளம் என்ன? எங்களுக்குச் சொல்ல வேண்டும் என்றார்கள்.
**இயேசு அவர்களுக்குப் பிரதியுத்தரமாக:**
''ஒருவனும் உங்களை **வஞ்சியாதபடிக்கு** எச்சரிக்கையாயிருங்கள்'';'' என்றார்
(மத்தேயு 24:3,4)

வேறு வார்த்தையில் சொல்லவேண்டுமானால், நாம் கடைசி காலத்தில் இருக்கிறோம் என்று ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறுகின்றார். அதன் முதல் அறிகுறிகளில் ஒன்று **திருச்சபைகளைத்** தாக்கும் (ஆரோக்கியமான உபதேசத்துக்கு எதிர்மறையான) வஞ்சகமாகும்.

(1 தீமோத்தேயு 4:1)ல், கடைசி காலத்திலே **''பெரிய அளவில் கள்ள உபதேசங்கள்''** திருச்சபையை தாக்கும் என்று பவுல் சொல்லுகிறார். ''ஆகிலும், ஆவியானவர் வெளிப்படையாய்ச் சொல்லுகிறபடி, பிற்காலங்களிலே மனச்சாட்சியில் சூடுண்ட பொய்யருடைய மாயத்தினாலே சிலர் வஞ்சிக்கிற ஆவிகளுக்கும் **பிசாசுகளின் உபதேசங்களுக்கும்** செவிகொடுத்து, விசுவாசத்தை விட்டு விலகிப்போவார்கள்''.

**ஆகையால், இந்நாட்களில் (இயேசு கிறிஸ்துவை பின்பற்றுகின்ற) உங்களுக்கும் எனக்கும் இந்த ''ஆரோக்கியமான உபதேசமானது'' எவ்வளவு முக்கியமானதாய் இருக்கிறது என்று பாருங்கள்?**

(1 தீமோத்தேயு 4:16)
''**உன்னைக்குறித்தும் உபதேசத்தைக்குறித்தும் எச்சரிக்கையாயிரு,**
இவைகளில் நிலைகொண்டிரு, இப்படிச் செய்வாயானால்,
**உன்னையும் உன் உபதேசத்தைக் கேட்பவர்களையும் இரட்சித்துக்கொள்ளுவாய்**''.

இந்த ஒரு வசனத்திலே, இரண்டு கருத்துக்களை நம்மால் பார்க்கமுடிகிறது. முதலாவதாக, முடிவு வரைக்கும் ஒரு விசுவாசி ஆரோக்கியமான உபதேசத்தை பற்றிக்கொள்ளவேண்டும் என்று எச்சரிக்கிறது. இரண்டாவதாக, சரியான உபதேசத்திலே நிலைக்கொண்டிருந்தால்தான், நம்மையும், மற்றவர்களையும் இரட்சிப்புக்குள் நடத்த முடியும் என்றும் கூறுகிறது. எதிலிருந்து இரட்சிப்பு? நரகத்தின் அக்கினியிலிருந்துதான்! அதாவது, ஆரோக்கியமான உபதேசத்தை விட்டுவிட்டு, ஒரு கள்ள உபதேசத்துக்கு மாறினால், நம்முடைய ஆத்துமாவையே இழந்துவிடக்கூடும் என்று பவுல் சொல்லுகிறார்.

லட்சக்கணக்கானோர் மூலம் கொண்டுவரப்படும் இவ்விதமான கள்ள உபதேசங்களினால், இவைகளைப் பின்பற்றுகின்றோர் அழிந்துபோகிறார்கள். இவைகளில், **“இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்’’** என்கிறது ஒரு பெரிய தவறான புதிய உபதேசமாகும். **உண்மையான விசுவாசிகளில்** பலர் இதற்குள் இருக்கின்றனர். நானும் ஒரு காலத்தில் இதில் சிக்கிதான் இருந்தேன். இந்த உபதேசத்தை எதிர்த்து, வெளிவர தீர்மானம் எடுக்க, இன்று திருச்சபைகளில் பலர் வெட்கப்படுகின்றனர். ஆனால், நீங்கள் எளிதில் கடந்து வந்த மற்ற உபதேசங்களைப்போல் இல்லாமல், இது உங்கள் ஆத்துமாவையே இழக்க வைத்துவிடும்!

“இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்’’ என்ற தவறான உபதேசத்தைப் பின்பற்றுகிறவர்கள் - இரட்சிக்கப்பட்ட ஒருவர் செய்யும் பாவங்களுக்காக தேவன் இவ்வுலகத்தில் அவரை தண்டித்தாலும், அந்த நபர் மரித்தால் அவர் பரலோகம் போய் சேர்ந்துவிடுவார் - என்று சொல்லுகிறார்கள். செய்யவேண்டியதெல்லாம், “கிறிஸ்துவை தங்கள் சொந்த இரட்சகராக ஒருதடவை ஏற்றுக்கொண்டால் போதும்’’, அதன் பிறகு எதுவும் பொருட்டல்ல - என்ன நடந்தாலும், நரக அக்கினியிலிருந்து இரட்சிக்கப்படுவோம் என்கிறார்கள். இரட்சிப்பை பெற ஒரு விசுவாசி எதுவும் செய்யவில்லையே, அதைப்போலவே, அதை இழப்பதற்கு அவன் எதுவும் செய்துவிடமுடியாது என்பது, இவர்களின் கருத்து.




இந்நாட்களில் உலகத்தின் பல இடங்களிலே, ஒருவர் “இயேசு கிறிஸ்துவை ஆண்டவராகவும், இரட்சகராகவும் ஏற்றுக்கொண்டுவிட்டால்’’, அவர் இரட்சிக்கப்பட்டவர், அதன் பிறகு அவர் என்ன செய்தாலும், அவர் தன் இரட்சிப்பை இழந்துபோக முடியாது என்று விசுவாசித்தும், பிரசங்கித்தும், போதித்தும் வருகிறார்கள். அவர் பாவம் செய்து, ஒருவேளை தீவிரமாக பாவத்தில் ஈடுபட்டாலும், “இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்’’ தன்னுடைய இரட்சிப்பை இழந்துபோக மாட்டார் என்கின்றனர். இது உண்மையாக இருக்குமென்றால், நம்முடைய தேவன் பட்சபாதமில்லாதவர் என்பதினாலே, விசுவாசிகளுக்கு (அவர்களுடைய இரட்சிப்புக்கு பிறகு) தேவபயத்தோடே பரிசுத்தமாக நடந்துகொள்ளுங்கள் என்று அப்போஸ்தலனாகிய பேதுரு (அதாவது வேதாகமும் கூட), கட்டளையிட்டிருப்பது மிகப்பெரிய தவறாக இருக்குமே! (1 பேதுரு 1:13-17)(வ.17) “அன்றியும் பட்சபாதமில்லாமல் அவனவனுடைய கிரியைகளின்படி நியாயந்தீர்க்கிறவரை நீங்கள் பிதாவாகத் தொழுதுகொண்டுவருகிறபடியால், இங்கே பரதேசிகளாய்ச் சஞ்சரிக்குமளவும் பயத்துடனே நடந்துகொள்ளுங்கள்.’’

**“இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்’’ என்ற இந்த கள்ள உபதேசத்தை நம்புகிறவர்கள், ஒரு சில வேதவசனங்களுக்குள் தங்களை ஒளித்துக்கொள்ளுகிறார்கள். அவைகளில் ஒன்று,** (ரோமர் 8:1) “ஆனபடியால், கிறிஸ்து இயேசுவுக்குட்பட்டவர்களாயிருந்து, மாம்சத்தின்படி நடவாமல் ஆவியின்படியே நடக்கிறவர்களுக்கு ஆக்கினைத்தீர்ப்பில்லை.’’ **ஆனால், இது “மாம்சத்தின்படி நடவாமல், ஆவியின்படி நடக்கிறவர்களுக்கு மட்டும்தான்’’ பொருந்தும் என்பதை அவர்கள் உணருவதில்லை. அதாவது எப்படிப்பட்ட விசுவாசிகளுக்குத்தான் ஆக்கினைத்தீர்ப்பு இல்லை என்று கூறுகிறது!** சில புதிய ஆங்கில வேதாகமங்களில், அநேக வசனங்களிலுள்ள பகுதிகளைத் தந்திரமாக எடுத்துப் போட்டிருக்கிறார்கள். அதைப்போன்று இந்த வசனத்தின் பின் பகுதி (ஒருவேளை உங்கள் ஆங்கில வேதாமத்திலே) எடுக்கப்பட்டிருந்தாலும், இந்த வசனத்தின் முன் பகுதியிலேயே கூறியபடி **“இயேசுவுக்குட்பட்டவர்களாக’’** இருப்பவர்களுக்குத்தான் இந்த வசனம் பொருந்தும். மாம்சத்தின்படியோ, ஆவியின்படியோ தொடர்ந்து நடக்கும்படிக்கும், அல்லது நடக்காதபடிக்கும் தீர்மானிக்க கிறிஸ்துவைப் பின்பற்றும் ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் ஒரு சுய விருப்பத்தை கொடுத்திருக்கின்றார். (இரட்சிக்கப்பட்ட பின்பு இதை அவர் எடுத்துவிடுவதில்லை). திராட்சை செடியாகிய கிறிஸ்துவுடனே இணைந்தபின்பு (அதாவது இரட்சிக்கப்பட்ட பிறகு) தொடர்ந்து மாம்சத்தின்படியே நடந்தால், அதன் விளைவாக வெட்டப்பட்டு நரக அக்கினியிலே போடும் நிலைதான் ஏற்படும். இதைத்தான், இயேசுவானவர் தம்மைப் பின்பற்றிய சீஷர்களுக்குச் சொல்லிக்கொடுத்தார் (யோவான் 15:1-6).

எனவே, இதை இன்னும் ஆராய்ந்து அறியும்படி
(எரேமியா 37:17)ல் கூறியிருப்பதுபோல்,
**கர்த்தரால் ஒரு வார்த்தை உண்டோ?**

மேலும் பவுல் சொல்வதுபோல் (ரோமர் 4:3)
**வேதவாக்கியம் என்ன சொல்லுகிறது?**




சமீபத்தில், வேத போதகராக இருக்கிற ஒரு தேவனுடைய ஊழியரிடத்தில் “இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்’’ என்ற இந்த தவறான உபதேசத்தைக் குறித்து கேட்கப்பட்டது. மனிதர்களுக்கு செவிகொடுக்கிறவர்கள் தான் இந்த உபதேசத்தை விரும்புகின்றனர் என்று அவர் சொன்னார். சிறையில் இருக்கையில் இரட்சிக்கப்படும் கைதிகள், வாசிப்பதற்கு வேதாகமம் மட்டுமே இருக்கிற படியால், அவர்கள் இந்த தவறான உபதேசத்தை வன்மையாக எதிர்கின்றனர்.

அநேக நவீன கால இறையியல் கல்லூரிகளிலுள்ள மாணவர்கள், இப்படிப்பட்ட பல பொய்களை அப்படியே நம்பிவிடுகிறது வேதனையாக உள்ளது! நான் அவைகளை "கிறிஸ்தவ பரிசேயர் கல்லூரிகள்" என அழைக்க தூண்டப்படுகிறேன்! (மோசே, ஆரோன், யோசுவாவின் காலங்களில், இஸ்ரவேலர்களுக்கென்று பழைய ஏற்பாடு முடியுமட்டும் எந்த ஒரு பரிசேயர் கல்லூரியுமே இல்லை என்பதால்); தேவ ஜனங்கள் ஊழியம் செய்ய இறையியல் கல்லூரிகள் இருந்தால்தான் முடியும் என்பது தேவனின் திட்டமல்ல என்று நான் விசுவாசிக்கிறேன். இதைப் போலவே, தமது முதல் சீஷர்களாக தெரிந்துகொள்ளப்பட்ட படிப்பறிவு இல்லாத அந்த மீனவர்களை; இறையியல் கல்லூரிகளுக்கு அனுப்பிவைக்க இயேசுவானவர் திட்டம்போடவுமில்லை. அவருக்கு சித்தமானால், அன்றே ஒரு இறையியல் கல்லூரியையும் ஏற்படுத்தியிருக்க முடியும்! நான் ஏன் இவைகளையெல்லாம் சொல்லுகிறேன்? **ஏனென்றால், மனிதன் ஏற்படுத்தும் நிறுவனங்கள் மூலம், மனுஷீக உபதேசங்கள் நுழைந்து, அதன் விளைவாக "தேவனை" விட "நிறுவனத்திற்கு" அதிக உத்திரவாதமாக சாய்ந்துவிடும் சிக்கல் இருக்கிறது.** இதைத்தான் வேதாகமத்தில் நாம் **தெளிவாக** பார்க்கிறோம் **(1 யோவான் 2:26,27)** "உங்களை வஞ்சிக்கிறவர்களைக்குறித்து இவைகளை உங்களுக்கு எழுதியிருக்கிறேன். (27) நீங்கள் அவராலே பெற்ற அபிஷேகம் உங்களில் நிலைத்திருக்கிறது, <u>ஒருவரும் உங்களுக்குப் போதிக்கவேண்டுவதில்லை</u>; அந்த <u>அபிஷேகம் சகலத்தையுங்குறித்து உங்களுக்குப் போதிக்கிறது</u>; அது சத்தியமாயிருக்கிறது, பொய்யல்ல, அது உங்களுக்குப் போதித்தபடியே அவரில் நிலைத்திருப்பீர்களாக.

மனிதர்கள், தாங்களாகவே ஏற்படுத்தும் நிறுவனங்கள் மூலம், காலப்போக்கில், போலியான செயல்பாடுகள் வர வாய்ப்பிருக்கிறது. இப்படி மனுஷீகத்தில் இயங்கும் இறையியல் கல்லூரிகள், நாளடைவில், தேர்ச்சிப்பெற்ற தங்கள் மாணவர்களை மிக மந்தமான நிலையிலேயே ஊழியத்திற்கு புறப்படப் பண்ணுகின்றனர். இதற்கு முக்கிய காரணம் **"இரட்சிக்கப்பட்டவன் எப்போதும் இரட்சிக்கப்பட்டவன்தான்" என்பதைப் போன்ற (மிக மந்தமான ஒரு நிலையை உருவாக்கும்) தவறான உபதேசங்கள்தான்.** (சாத்தான் இதிலே குறியாக இருப்பதில், சந்தேகமே இல்லையே). **(ஏசாயா 32:9-11)**ல் <u>ஏசாயா இதை தீர்க்கதரிசனமாக உரைத்திருக்கிறார்</u>. நாம் வாழுகின்ற இந்த கடைசி காலத்தில், **திருச்சபைகளைத் தாக்கும் புளித்தமாவுக்கு ஒப்பான, இப்படிப்பட்ட மந்தமான நிலையை உருவாக்கும், தவறான உபதேசங்களை விட்டு; விழித்து எழும்புங்கள்** என்று நம்முடைய ஆண்டவர் எச்சரித்திருக்கின்றார் **(வெளிப்படுத்தின விசேஷம் 3:2-6)!**

இவைகளை வாசிக்கின்ற உங்களுக்கு ஒரு வீட்டுப் பாடம் கொடுக்க விரும்புகிறேன். நீங்கள் வேதாகமத்தைக் கொஞ்சம் ஆழமாக படித்தால்; **வெளிப்படுத்தின விசேஷம்** மற்றும் **சுவிசேஷ புத்தகங்களிலே,** இயேசுவானவர் **"ஆவியானவர், சபைகளுக்குச் சொல்லுகிறதை, காதுள்ளவன் கேட்கக்கடவன்"** என்று முக்கியப்படுத்திக் கூறியிருப்பதை, நீங்கள் காணமுடியும். இதைச் சொன்ன ஒவ்வொரு சூழ்நிலையிலும், "வெதுவெதுப்பான திருச்சபையைத், தட்டி எழுப்பும்" ஒரு மிகுந்த பாரத்துடன் அவர் உரைத்தார். அதாவது, "இரட்சிக்கப்பட்டவன், எப்போதும் இரட்சிக்கப்பட்டவன் <u>**அல்ல**</u>", இரட்சிக்கப்பட்ட ஒவ்வொருவரும், ஆவியானவராலே தொடர்ந்து நடத்தப்பட வேண்டும் என்பதே அவருடைய போதனையாக இருந்தது. "இரட்சிக்கப்பட்டவன், எப்போதும் இரட்சிக்கப்பட்டவன்தான்" என்பதைப் போன்ற தவறான உபதேசங்கள், கடைசி காலத்தில் திருச்சபையைத் தாக்கி; சரியான **"ஆரோக்கியமான உபதேசங்களை"** கேட்காமல், ஜனங்களை செவித்தினவுள்ளவர்களாக மாற்றும் என்று கர்த்தர் முன்னமே தீர்க்கதரிசனமாக எச்சரித்திருக்கின்றார் **(2 திமோத்தேயு 4:1-4).**

“இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்'' என்ற இந்த தவறான உபதேசம் அநேக புத்தியில்லாத கன்னிகைகளை ஏற்படுத்துகிறது. புத்தியில்லாத கன்னிகைகளைக் குறித்து இயேசுவானவர் சொல்லிய உவமையிலே - அவர்கள் ஒரு காலத்தில் பிரகாசமுள்ள சாட்சிகளாக வாழ்ந்தவர்கள் (எரிகின்ற தீவட்டிகளைக் கொண்டிருந்தனர்), அவர்கள் பரிசுத்த ஆவியானவரை பெற்றிருந்தவர்கள் (எண்ணெயைக் கொண்டிருந்தனர்), மேலும் அவர்கள் கிறிஸ்துவின் வருகைக்கு காத்திருந்தவர்கள் (மணவாளனின் வருகைக்கென்று காத்திருந்தனர்). இவையெல்லாம் ஒரு விசுவாசிக்கு நல்ல குணங்களாக இருந்தாலும், கடைசியில், **முடிவு வரைக்கும் இவைகளில் நிலைத்திராமல் - தங்கள் விசுவாசத்தையும், வைராக்கியத்தையும் இழந்து**; அவர்கள் தீவட்டிகளும் அணைந்துபோய் ஆவிக்குரிய ஒரு மந்தமான நிலையை அடைந்தனர். இது நமக்கு ஒரு எச்சரிப்பாக இருக்கவேண்டும்!

(2 கொரிந்தியர் 9:24-27)ல் தன்னுடைய இரட்சிப்பை பற்றி ஒரு தவறான நிச்சயத்தோடு இருந்துவிட்டு, முடிவிலே ஆகாதவனாய் போய்விடாதபடிக்கு, தான் ஜாக்கிறதையாக இருப்பதாக பவுல் எச்சரிக்கிறார். உன்னுடைய, மற்றும் மற்றவர்களுடைய இரட்சிப்பையும் உறுதிபடுத்திக்கொள் என்று தீமோத்தேயுவுக்கு எச்சரித்தார் (1 தீமோ 4:16). “இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்” என்றால், வேதத்திலுள்ள இந்த எச்சரிப்புகளுக்கு அர்த்தமே இல்லாமல் போய்விடுமே! அதன் பிறகு, இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்கு எகிப்த்தை விட்டு வெளிவந்த இஸ்ரவேலர்களை உதாரணமாக சுட்டிக்காட்டுகிறார். (1 கொரிந்தியர் 10:1-12) இவைகளெல்லாம் நமக்கு திருஷ்டாந்தங்களாக சம்பவித்தது என்று சொல்லுகிறார். அவர்கள் சிவந்த சமுத்திரத்தினால் ஞானஸ்நானம் பண்ணப்பட்டார்கள் (இது நம்முடைய தண்ணீர் ஞானஸ்நானத்தைக் குறிக்கிறது). எல்லாரும் ஞானபோஜனத்தைப் புசித்தார்கள் (இது நம்முடைய வேதாகமத்தைக் குறிக்கிறது). எல்லாரும் ஞானக் கன்மலையின் தண்ணீரைக் குடித்தார்கள் (அந்தக் கன்மலை கிறிஸ்துவே). ஆனாலும், **அவர்களில் <u>அதிகமானபேர்களில்</u> தேவன் பிரியமாயிருக்கவில்லை. விசுவாசிகளின் இரட்சிப்பின் நிச்சயத்தைக் குழப்புவதற்காகவா இப்படி செய்தார்?** <u>இல்லவே இல்லை</u>. (கானான் தேசத்துக்கு இஸ்ரவேலர்களைக் கொண்டுவருவதற்கான) தேவனுடைய வாக்குத்தத்தம் மாறாமல்தான் இருந்தது. ஆனால், இஸ்ரவேல் ஜனங்கள்தான் அவபக்தியை வெறுத்து, நீதியாய் வாழும்படியான தங்கள் உடன்படிக்கையை காத்துக்கொள்ள தவறிவிட்டார்கள். இதனால்தான், (1 கொரிந்தியர் 10:11) ‘‘இவைகளெல்லாம் திருஷ்டாந்தங்களாக அவர்களுக்குச் சம்பவித்தது; உலகத்தின் முடிவுகாலத்திலுள்ள **நமக்கு எச்சரிப்புண்டாக்கும்படி எழுதப்பட்டும் இருக்கிறது**'', **என்று பவுல் கூறுகின்றார்.**

(எகிப்தாகிய) நம்முடைய பாவங்களிலிருந்து நாமே வெளிவருவதற்கு (பாவிகளாயிருந்த) நம்மால் எதுவும் செய்ய முடியாத நிலையிலே, கர்த்தருடைய சுத்த கிருபை மட்டுமே நம்மைத் தூக்கி எடுத்து இரட்சித்தது என்பதை நாம் கட்டாயமாக ஒத்துக்கொள்ளத்தான் வேண்டும்! ஆனாலும், எகிப்திலிருந்து கானான் ஏதோ ஒரு அடி தூரத்தில் இல்லை என்பதை நாம் புரிந்துகொள்ள வேண்டும். இரட்சிக்கப்பட்ட பின்பு, நம்முடைய விசுவாசத்தை செயல்படுத்தி நாம் வாழ ஆரம்பிக்கவேண்டும். நம்முடைய ஆவிக்குரிய கானானை நோக்கி நாம் <u>விசுவாசித்து நடக்கவேண்டும்</u>. நாம் இப்படி நடப்பதும், நடக்காமலிருப்பதும் <u>நாம் எடுக்கும் நம்முடைய அனுதின தீர்மானம் தான்</u>. நாம் அனுதினமும் கர்த்தரை பின்பற்றவேண்டும் என்று இயேசுவானவர் சொல்லியிருக்கின்றார் (லூக்கா 9:23,24).

இரட்சிக்கப்பட்ட ஒவ்வொரு விசுவாசிக்கும் தேவன் நித்திய ஜீவனை வாக்களித்திருந்தாலும், அதில் முடிவுபரியந்தம் நிலைத்திருக்கும் அந்த நிபந்தனையின்படிதான் அது நிறைவேறும். இதைத்தான் நாம் ஆரம்பத்தில் பார்த்தோம் (1 யோவான் 2:24,25). யோவானுக்கு இந்த உபதேசம் எப்படி தெரிந்தது? தன்னுடைய எஜமானராகிய இயேசு கிறிஸ்து போதித்த ஒரு சத்தியம்தான் இது. திராட்சை செடியாகிய (தம்முடைய போதனைகளில்) நிலைத்திருந்தால் மாத்திரமே கனி கொடுக்கமுடியும் என்றும், இல்லாவிட்டால் வெட்டுண்டு அக்கினியிலே போடப்படுவோம் என்று அவரே போதித்திருக்கின்றார் (யோவான் 15:1-6).

தன்னுடைய எஜமானர் சொன்ன இதே வார்த்தைகளையே அப்போஸ்தலனாகிய பவுலும் புறஜாதியாரான விசுவாசிகளாகிய நமக்கும் எச்சரிப்பாக சொல்லுகிறார். (ரோமர் 11:19-22) "நான் ஒட்டவைக்கப்படுவதற்கு அந்தக் கிளைகள் முறித்துப்போடப் பட்டதென்று சொல்லுகிறாயே. (20) நல்லது, அவிசுவாசத்தினாலே அவைகள் முறித்துப் போடப்பட்டன, நீ விசுவாசத்தினாலே நிற்கிறாய்; மேட்டிமைச் சிந்தையாயிராமல் பயந்திரு. (21) சுபாவக்கிளைகளைத் தேவன் தப்பவிடாதிருக்க, உன்னையும் தப்பவிட மாட்டார் என்று எச்சரிக்கையாயிரு. (22) ஆகையால், தேவனுடைய தயவையும் கண்டிப்பையும் பார்; விழுந்தவர்களிடத்திலே கண்டிப்பையும், உன்னிடத்திலே தயவையும் காண்பித்தார்; அந்தத் தயவிலே நிலைத்திருப்பாயானால் உனக்குத் தயவுகிடைக்கும்; நிலைத்திராவிட்டால் நீயும் வெட்டுண்டுபோவாய்."



ஆதி திருச்சபையையும் பவுல் எச்சரிக்கிறார். "நான் போனபின்பு மந்தையைத் தப்பவிடாத கொடிதான ஓநாய்கள் உங்களுக்குள்ளே வரும்." (அப் 20:29) தன் எஜமானர் சொன்னதையே உரைக்கிறார். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து, **"ஆட்டுதோலைப் போர்த்துக்கொண்டு, உள்ளத்திலோ ஓநாய்களாக வருகிறவர்களுக்கு எச்சரிக்கையாயிருங்கள்"**, என்று நம்மை எச்சரித்திருக்கின்றார் (மத்தேயு 7:15). இங்கு, எந்த சூழ்நிலையிலே கர்த்தர் இதை சொல்லுகின்றார் என்பதை கவனியுங்கள். சற்று முன்புதான் (வ.15)க்கு முந்தின (வ.13,14)ல், விசாலமான வழியிலே செல்லுகிறவர்கள் (ஒரு அலட்சியமான வாழ்க்கையை வாழுகிறவர்கள்) அழிந்துபோவார்கள் என்றும், இடுக்கமான வாசல் வழியாய் உட்பிரவேசிக்கிறவர்கள் (அதை கண்டுபிடிக்கின்ற சிலர் மட்டும்) நித்திய ஜீவனை அடைவார்கள் என்றும் கர்த்தர் தீர்க்கதரிசனமாக எச்சரிக்கின்றார்.

(மத்தேயு 7:13-27)ஐ கொஞ்சம் நேரமெடுத்து தியானித்துப் பார்த்தால், நாம் இப்பொழுது ஆராய்ந்துவருகிற "இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்'' என்பதைப் போன்ற கள்ள உபதேசங்கள் விசுவாசிகளை இடுக்கமான வாசல் வழியாய் செல்லாதபடி திசைமாறச் செய்கிறது. இப்படிப்பட்ட தவறான உபதேசங்கள் (உண்மையாய் கீழ்ப்படியும் விசுவாசிகள்) பயத்தோடும் நடுக்கத்தோடும் தங்களுடைய இரட்சிப்பை நிறைவேற்ற பிரயாசப்படவேண்டும் (1 கொரிந்தியர் 9:23-27; பிலிப்பியர் 2:12) என்கின்ற **தேவனுடைய வார்த்தையின் கருபொருளையே எதிர்க்கின்றன.** இந்த "இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்'' என்ற கள்ள உபதேசத்தை நம்புகிறவர்கள், தேவபக்தியோடு இருப்பதுபோல நினைத்தாலும், அதின் பலனை மறுதலிக்கும்படி தேவ சித்தத்தைப் பற்றிய ஆவியானவரின் வழிநடத்துதலை அலட்சிய படுத்துகின்றனர்.

ஆண்டவரே, ஆண்டவரே என்று சொல்லிக்கொண்டாலும் பல விசுவாசிகள் நித்திய ஜீவனுக்குள் பிரவேசிப்பது இல்லை என்று கர்த்தர் எச்சரிக்கின்றார் (மத்தேயு 7:21-13). இயேசுவின் நாமத்திலே வரங்களை செயல்படுத்தி, ஊழியங்களை செய்தாலும், பிதாவானவரின் சித்தத்தை செய்யவில்லை என்றால் கைவிடப்படுவார்கள். அதினால்தான், **திராட்சை செடியுடன் இணைக்கப்பட்ட பிறகும், நாம் "வெட்டி'' அக்கினியிலே போடப்படும் வாய்ப்பு இருக்கிறது** (யோவான் 15:1-6).

என்ன நோக்கத்தோடு நம்முடைய பாவங்களிலிருந்து நாம் இரட்சிக்கப் பட்டிருக்கிறோம் (மத்தேயு 1:21; 1 யோவான் 3:5) என்பதை நாம் அடிக்கடி மறந்துவிடுகிறோம். (ஒரு நாய், தான் கக்கினதை திரும்ப தின்னுவதுபோல) பழைய பாவங்களுக்கு செல்ல வாய்ப்பு இருப்பதாக பேதுரு கூறுகிறார் (2 பேதுரு 2:22). அநேக பிரசங்கியார்கள் (எபேசியர் 2:8,9)லிருந்து கிருபையைக் குறித்து ஏராளமாக பிரசங்கித்தாலும், இதற்கு அடுத்த வசனம் (எபேசியர் 2:10)ம் வசனத்தின்படி இரட்சிப்புக்கு பிறகு நாம் தொடர்ந்து நற்கிரியைகளை செய்யும்படி முன்னதாகவே அழைக்கப்பட்டிருக்கிறோம் என்று கூறுவதை விட்டுவிடுகின்றனர். (எபேசியர் 2:10) ''ஏனெனில், நற்கிரியைகளைச் செய்கிறதற்கு நாம் கிறிஸ்து இயேசுவுக்குள் சிருஷ்டிக்கப்பட்டு, தேவனுடைய செய்கையா யிருக்கிறோம்; அவைகளில் நாம் நடக்கும்படி அவர் முன்னதாக அவைகளை ஆயத்தம்பண்ணியிருக்கிறார்.'' இரட்சிப்புக்கு பின்பு தொடர்ந்து நற்கிரியைகளை செய்ய நாம்தான் தீர்மானம் எடுக்க வேண்டும். அனுதினமும் நம்முடைய சிலுவையை எடுத்துக்கொண்டு இயேசுவைப் பின்பற்றுவது, நியாயத்தீர்ப்பு நாளிலே (ஜீவனுக்குள் போகிறோமா அல்லது மரணத்துக்குள் போகிறோமா) என்கிற ஒரு மிகப் பெரிய வித்தியாசத்தை உண்டுபண்ணும். ஆகையால்தான், கர்த்தரை, ஆண்டவரே, ஆண்டவரே என்று மட்டும் சொன்னால் போதாது, தினந்தோறும் கர்த்தருக்கு பிரியமான ஒரு வாழ்க்கையை நாம் வாழவேண்டும் என்று இயேசுவானவர் கூறினார் (மத்தேயு 7:21).

(2 பேதுரு 2:20,21) ‘‘கர்த்தரும் இரட்சகருமாயிருக்கிற இயேசுகிறிஸ்துவை அறிகிற அறிவினாலே உலகத்தின் அசுத்தங்களுக்குத் தப்பினவர்கள் மறுபடியும் அவைகளில் சிக்கிக்கொண்டு ஜெயிக்கப்பட்டால், அவர்களுடைய பின்னிலைமை முன்னிலைமையிலும் கேடுள்ளதாயிருக்கும். (21) அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப் பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும்’’, **என்று அப்போஸ்தலனாகிய பேதுரு சொல்லுகிறார். ஒரு காலத்தில் இரட்சிக்கப் பட்டிருந்தாலும், (உலகபிரகாரமான விசாலமான வழியினாலே கவர்ந்து இழுக்கப் பட்டு) மீண்டும் பாவங்களுக்குள் சிக்கினவர்களைக் குறித்து பேதுரு கூறுகிறார்.**

(எபிரெயர் 6:4-6) ‘‘ஏனெனில், ஒருதரம் பிரகாசிப்பிக்கப்பட்டும், பரம ஈவை ருசிபார்த்தும், பரிசுத்த ஆவியைப் பெற்றும், (5) தேவனுடைய நல்வார்த்தையையும் இனிவரும் உலகத்தின் பெலன்களையும் ருசிபார்த்தும், (6) மறுதலித்துப்போனவர்கள், தேவனுடைய குமாரனைத் தாங்களே மறுபடியும் சிலுவையில் அறைந்து அவமானப் படுத்துகிறபடியால், மனந்திரும்புதற்கேதுவாய் அவர்களை மறுபடியும் புதுப்பிக்கிறது கூடாதகாரியம்’’, **என்று எபிரேயர் நிருபத்தை எழுதியவர் கூறுகிறார்.**

**மேலும்,** (எபிரெயர் 10:26-29) ‘‘சத்தியத்தை அறியும் அறிவை அடைந்தபின்பு நாம் மனப்பூர்வமாய்ப் பாவஞ்செய்கிறவர்களாயிருந்தால், பாவங்களினிமித்தம் செலுத்தத்தக்க வேறொருபலி இனியிராமல், (27) நியாயத்தீர்ப்பு வருமென்று பயத்தோடே எதிர்பார்க்குதலும், விரோதிகளைப் பட்சிக்கும் கோபாக்கினையுமே இருக்கும். (28) மோசேயினுடைய நியாயப்பிரமாணத்தைத் தள்ளுகிறவன் இரக்கம்பெறாமல் இரண்டு மூன்று சாட்சிகளின் வாக்கினாலே சாகிறானே; (29) தேவனுடைய குமாரனைக் காலின்கீழ் மிதித்து, தன்னைப் பரிசுத்தஞ்செய்த உடன்படிக்கையின் இரத்தத்தை அசுத்தமென்றெண்ணி, கிருபையின் ஆவியை நிந்திக்கிறவன் எவ்வளவு கொடிதான ஆக்கினைக்குப் பாத்திரவானாயிருப்பான் என்பதை யோசித்துப்பாருங்கள்.

(யாக்கோபு 5:19,20) ‘‘சகோதரரே, உங்களில் ஒருவன் சத்தியத்தைவிட்டு விலகி மோசம் போகும்போது, மற்றொருவன் அவனைத் திருப்பினால், (20) தப்பிப்போன மார்க்கத்தினின்று பாவியைத் திருப்புகிறவன் ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து, திரளான பாவங்களை மூடுவானென்று அறியக்கடவன். **“இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்’’** என்றால், **சத்தியத்தை விட்டு பாவத்துக்குத் திரும்பாதபடிக்கு ஒரு எச்சரிப்பை ஏன் கொடுக்கவேண்டும்?** மேலும், **“ஒரு ஆத்துமாவை மரணத்தினின்று இரட்சித்து’’ என்றால், அவன் ஆத்துமாவை மரணத்தில் இழக்க வாய்ப்பு இருக்கிறது என்றுதானே அர்த்தம்!** கெட்ட குமாரன், **குமாரனாக இருந்து கெட்டுபோனவன் என்பதை நினைவில் கொள்ளவேண்டும். பிதாவின் பிள்ளையாக அவருடன் வாழ்ந்து, பின்பு காணாமல் போனவன். பாவத்திலிருந்து இரட்சிக்கப்பட்ட விசுவாசி, மீண்டும் பாவத்திற்கு திரும்புவதைக் குறித்து பேதுரு சொல்லுகிறார்.**
(2 பேதுரு 2:21) ‘‘அவர்கள் நீதியின் மார்க்கத்தை அறிந்தபின்பு தங்களுக்கு ஒப்புவிக்கப்பட்ட பரிசுத்த கற்பனையை விட்டு விலகுவதைப்பார்க்கிலும் அதை அறியாதிருந்தார்களானால் அவர்களுக்கு நலமாயிருக்கும். (22) நாய் தான் கக்கினதைத் தின்னவும், **கழுவப்பட்ட பன்றி சேற்றிலே புரளவும் திரும்பினது** என்று சொல்லப்பட்ட மெய்யான பழமொழியின்படியே அவர்களுக்குச் சம்பவித்தது.’’

கெட்ட குமாரன் திரும்பி வர தானே தீர்மானித்தான். தகப்பன் எந்த ஒரு விளைவையும் ஏற்படுத்தவில்லை. அவன் திரும்பி வராதிருந்தால் குமாரனுக்குரிய சுதந்திரங்களை இழந்திருப்பான்.

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, பிசாசானவன் கெர்ச்சிக்கிற சிங்கம்போல இன்றைக்கும் சுற்றிக்கொண்டுதான் இருக்கிறான். (அவன் இன்னும் பாதாளத்தில் அழிக்கப்படவில்லை). அது ஏவாளாக இருந்தாலும், கிறிஸ்துவின் மணவாட்டியாகிய நாமாக இருந்தாலும், "தேவன் அப்படிச் சொன்னதுண்டோ'' என்று சத்தியத்தை சிறிதளவு புரட்டவே முயற்சிக்கிறான். அன்று, முதல் ஆதாமின் ஏவாளிடம் சொன்னது போலவே, இன்றைக்கும், **"<u>நீ சாகவே சாவதில்லை</u>''** என்று இரண்டாம் ஆதாமின் ஏவாளாகிய (கிறிஸ்துவின் மணவாட்டியினிடத்திலும்) தந்திரமாக வலை வீசிக்கொண்டிருக்கிறான். **"இரட்சிக்கப்பட்டுவிட்டால், <u>நீ சாகவே சாவதில்லை</u>''**, என்றால் யோசித்துப் பாருங்கள்! இரட்சிக்கப்பட்ட நாம் அனைவரும் எப்படி இருந்தாலும் பரலோகம் போய்விடுவோம் என்று பிசாசுக்கு தெரியும் என்றால், அவன் நம்மிடத்தில் இப்படி நேரத்தை வீணடிப்பானா என்ன?

(கலாத்தியர் 6:8,9) ''<u>தன் மாம்சத்திற்கென்று விதைக்கிறவன்</u> மாம்சத்தினால் அழிவை அறுப்பான்; <u>ஆவிக்கென்று விதைக்கிறவன்</u> <u>ஆவியினாலே நித்தியஜீவனை அறுப்பான்</u>. (9) நன்மைசெய்கிறதில் சோர்ந்துபோகாமல் இருப்போமாக; நாம் தளர்ந்து போகாதிருந்தால் ஏற்றகாலத்தில் அறுப்போம்.'' ஆக, விதைப்பதும், அறுப்பதும், ஒரு விசுவாசியினுடைய பொறுப்பாக இருக்கிறது. இதிலே, "விதைத்தால்'' என்று சொல்லியிருப்பதால், நம்முடைய செயலின்படிதான் பின்விளைவுகளை சந்திப்போம் என்று புரிகிறது. இது "இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்'' என்பதற்கு நேர் எதிர்மறையாக இருக்கிறதே! நண்பரே, இதைவிட வேதவசனம் இன்னும் தெளிவாக சொல்லவேண்டிய அவசியம் இல்லை. "இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்'' என்பது நிச்சயமாகவே பிசாசின் ஒரு உபதேசமாகவே இருக்கிறது. மேற்கூறிய வசனங்களை இன்னும் வேறு விதமாக புரிந்துகொள்வோம் என்றால், ஒன்று அப்படிப்பட்டவர்களுக்கு மாய்மாலமான ஒரு மனப்பாண்மை இருக்கவேண்டும், அல்லது வேதவசனம் மாய்மாலமானது என்று அவர்கள் எண்ணுகிறவர்களாக இருக்கவேண்டும்.

தன் சகோதரனை "மூடனே'' என்று சொல்லுகிறவன் எரிநரகத்துக்கு ஏதுவாயிருப்பான் என்று இயேசுவானவர் சீஷர்களை எச்சரித்திருக்கின்றார் (மத்தேயு 5:22). எந்த ஒரு ஸ்திரீயை இச்சையோடு பார்க்கிற எவனும் அவளுடன் விபசாரம் செய்தாயிற்று என்றும் சீஷர்களை எச்சரித்தார் (மத்தேயு 5:28). நீங்கள் மற்றவர்களை மன்னிக்காவிட்டால், உங்கள் பரம பிதாவும் உங்களை மன்னிக்கமாட்டார் என்றும் சீஷர்களை எச்சரித்தார் (மத்தேயு 6:15). இதையெல்லாம் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்குத்தானே சொன்னார்? "இவைகளெல்லாம் விசுவாசிகளுக்குப் பொருந்தாது'' என்று உங்கள் வேதாகமத்திலே ஏதாவது குறிப்பு இருக்கிறதா? என்னுடைய வேதாகமத்தில் இல்லை!




நிருபங்களிலிருந்து திருச்சபையை எச்சரித்து, விசுவாசிகளை உணர்த்தி, அக்கினியாக பிரசங்கித்த பிறகு, கடைசியில் செய்த பிரசங்கத்தையே தண்ணீரை ஊற்றி அணைத்துவிடும் விதமாக - “இதற்காகத்தான் நீங்கள் இயேசு கிறிஸ்துவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளவேண்டும்’’ என்று முடிக்கும்போது - இது இரட்சிக்கப்படாதவர்களுக்குத்தான் என்ற நினைப்பு அங்கு இருக்கும் விசுவாசிகளுக்கு வந்துவிடுகிறது. மேலும், நான்தான் இரட்சிக்கப்பட்டுவிட்டேனே என்கிற பெருமூச்சுடன் கூடிய ஒரு நிம்மதியோடு இருந்துவிடுகிறார்கள். நான் சொல்வது உங்களுக்கு புரியும் என்று நினைக்கிறேன்! தேவனுடைய வார்த்தையின் சத்தியத்தை லேசாக புரட்ட பிசாசு எப்படி இந்த பிரசங்கியார்களைக் கூட பயன்படுத்துகிறான் என்பதை நாம் கவனிக்கவேண்டும். “இரத்தத்தைச் சிந்தாதபடிக்கு தன் பட்டயத்தை (இருபுறம் கருக்குள்ள தேவ வசனமாகிய ஆவியின் பட்டயத்தை) அடக்கிக்கொள்ளுகிறவன் சபிக்கப்பட்டவன்’’ என்று எரேமியா உரைக்கிறார் (எரேமியா 48:10).

இதைப் போன்ற ஒரு பிரசங்கத்தை கேட்ட பின்பு - “நான் இரட்சிக்கபட்டவன், ஆகவே இன்றைக்கு உங்கள் பிரசங்கத்தில் எதுவும் எனக்குப் பொருந்தவில்லை, மேலும் உங்கள் செய்தியின் எந்த எச்சரிப்பையும் நான் எடுத்துக்கொள்ள அவசியமில்லாமல், நான் சந்தோஷமாய் இன்றைக்கு வீட்டுக்கு போகிறேன், ரொம்ப தேங்க்ஸ் பாஸ்டர்’’ - என்று விடைபெறும்போது சொன்னால் எப்படி இருக்கும்? இதைப்போன்று எவ்வளவு பேர் வீடு திரும்பியிருப்பார்கள் என்று உணர்ந்து, அந்த ஆராதனையில் இருபுறமும் கருக்குள்ள பட்டயமாகிய வேத வசனம் கிரியை செய்வதை பிரசங்கத்தின் முடிவிலே, தான் கெடுத்துப்போட்டதை அந்த பாஸ்டர் தன் மனதிலே பதித்துக்கொண்டால் நலமாய் இருக்கும்! **திருச்சபைக்கு வெளியே செய்யவேண்டியவைகளை நாம் திருச்சபைக்கு உள்ளே செய்துகொண்டிருக்கிறோம்,** திருச்சபைக்கு உள்ளே செய்யவேண்டியவைகளை நாம் திருச்சபைக்கு வெளியே செய்துகொண்டிருக்கிறோம் என்பதுதான் வேதனையான விஷயம் **(1 கொரிந்தியர் 5:9-13).** இதற்கு மாறாக, வேதத்தின்படி, **திருச்சபைகளுக்குள்ளே - எல்லா நீடிய சாந்தத்தோடும், உபதேசத்தோடும் கண்டனம்பண்ணி, கடிந்துகொண்டு, புத்திசொல்லும் ஆரோக்கியமான உபதேசம்தான் இரட்சிக்கப்பட்ட விசுவாசிகளுக்குக் கொடுத்தாக வேண்டும் (2 தீமோத்தேயு 4:1-4).** இன்றைக்கு இதுதான் பற்றாக்குறை**!!!**

இந்நாட்களில், விசுவாசிகள் தங்கள் தங்கள் விருப்பத்திற்கேற்ப பிரசங்கங்களைக் கேட்க விரும்புவதால், **பலர் விசாலமான வாசலில் செல்லவைக்கும் பிரசங்கங்களையே செய்ய விரும்புகிறார்கள்.** சுகம், பொருளாதாரம், சந்தோஷம், அன்றாட வாழ்வின் ஆடம்பரம் - இது மட்டும்தான் இந்த பிரசங்கியார்களின் செய்தியாகும். ஆனால் இந்த சுவிசேஷமோ வேதத்தில் இல்லை. (1 கொரிந்தியர் 15:19) **"இம்மைக்காகமாத்திரம் நாம் கிறிஸ்துவின்மேல் நம்பிக்கையுள்ளவர்களாயிருந்தால், எல்லா மனுஷரைப்பார்க்கிலும் பரிதபிக்கப்படத்தக்கவர்களாயிருப்போம்."** வேதாகமத்திலோ (2 தீமோத்தேயு 3:10-13) "நீயோ என் போதகத்தையும் நடக்கையையும் நோக்கத்தையும் விசுவாசத்தையும் நீடிய சாந்தத்தையும் அன்பையும் பொறுமையையும், (11) அந்தியோகியா, இக்கோனியா, லீஸ்திரா என்னும் பட்டணங்களில் எனக்கு உண்டான துன்பங்களையும் பாடுகளையும் நன்றாய் அறிந்திருக்கிறாய்; எவ்வளவோ துன்பங்களைச் சகித்தேன்; **இவையெல்லாவற்றினின்றும் கர்த்தர் என்னை நீங்கலாக்கி விட்டார்.** (12) அன்றியும் கிறிஸ்து இயேசுவுக்குள் தேவபக்தியாய் நடக்க மனதாயிருக்கிற யாவரும் துன்பப்படுவார்கள். (13) பொல்லாதவர்களும் எத்தர்களுமானவர்கள் மோசம்போக்குகிறவர்களாகவும், மோசம்போகிறவர்களாகவுமிருந்து **மேன்மேலும் கேடுள்ளவர்களாவார்கள்**", என்று சொல்லப்பட்டுள்ளது.

பரிசுத்த வேதாகமத்திலே இல்லாத வேறு ஒரு ஆவியையும், வேறு ஒரு கிறிஸ்துவையும் குறித்து பேசும் வேறு ஒரு சுவிசேஷத்தை இந்த கள்ள போதகர்கள் பிரசங்கிக்கிறார்கள் என்று பவுல் கூறுகிறார் (2 கொரிந்தியர் 11:1-4). ஆதி திருச்சபைகளில் இருந்த ஆவிக்குரிய வளர்ச்சி, கடிந்துகொள்ளுதல், திருத்திக்கொள்ளுதல் மற்றும் நீதியாய் வாழ்வதற்கு தேவையான புத்திமதிகளையும், பயிற்சிகளையும் இவர்கள் கொடுக்க தவறிவிடுகிறார்கள். **மனிதர்களை பிரியப்படுத்துகிறபடி பிரசங்கிக்கவைக்கக்கூடிய** ஒரு **சோதனை,** பவுலின் காலத்திலிருந்தே இருந்துவந்தாலும், நாம் அவைகளை விட்டு விலக வேண்டும். இதனால்தான், தான் இன்னும் மனுஷனை பிரியப்படுத்தும்படி ஊழியம் செய்யவில்லை என்றும், இரண்டு எஜமான்களுக்கு தன்னால் ஊழியம் செய்ய முடியாது என்றும் பவுல் தெளிவாக விளக்குகிறார் (கலாத்தியர் 1:6-12; 1 தெசலோனிக்கேயர் 2:1-6; கொலோசெயர் 2:4-8).

**இவ்வளவு எழுதின பிறகும், விசுவாசிகளை தேவனுக்கு தொடர்ந்து "கீழ்ப்படிய" ஜாக்கிரதையாக இருக்கும்படிக்கு பவுல் வலியுறுத்துகிறார்.** (பிலிப்பியர் 2:12) "ஆதலால், எனக்குப் பிரியமானவர்களே, நீங்கள் எப்பொழுதும் கீழ்ப்படிகிறபடியே, நான் உங்களுக்குச் சமீபமாயிருக்கும்பொழுது மாத்திரமல்ல, நான் தூரமாயிருக்கிற இப்பொழுதும், அதிக பயத்தோடும் நடுக்கத்தோடும் உங்கள் இரட்சிப்பு நிறைவேறப் பிரயாசப்படுங்கள்." **பவுல் ஏன் இந்த அளவுக்கு எச்சரிக்கிறார் என்றால்,** (1 கொரிந்தியர் 9:27) "மற்றவர்களுக்குப் பிரசங்கம்பண்ணுகிற நான்தானே ஆகாதவனாய்ப் போகாதபடிக்கு, என் சரீரத்தை ஒடுக்கிக் கீழ்ப்படுத்துகிறேன்," **என்று தன்னைக் குறித்தே அறிக்கை யிடுகிறார். (ஆகாதவன் என்றால், விலக்கிவைக்கப்படுவது அல்லது நிராகரிக்கப் படுவது என்றும் அர்த்தம்). இந்நேரத்தில் கொஞ்சம் நிறுத்தி, "இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்" என்று நம்புகிறவர்கள் எந்த வேதாகமத்தைதான் வாசிக்கிறார்கள் என கேட்க ஆர்வமாக இருக்கிறேன்.**

## முடிவு பரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்

(மத்தேயு 24:13) ''முடிவுபரியந்தம் நிலைநிற்பவனே இரட்சிக்கப்படுவான்.'' **இந்த அளவுக்குத் தெளிவாக ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து போதித்த பிறகும், "இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்'' என்று சொல்லிக் கொண்டிருந்தால் என்ன அர்த்தம்?** (வெளி 2:10) ''நீ படப்போகிற பாடுகளைக்குறித்து எவ்வளவும் பயப்படாதே; இதோ, நீங்கள் சோதிக்கப்படும்பொருட்டாகப் பிசாசானவன் உங்களில் சிலரைக் காவலில் போடுவான்; பத்துநாள் உபத்திரவப்படுவீர்கள். ஆகிலும் நீ மரணபரியந்தம் உண்மையாயிரு, அப்பொழுது ஜீவகிரீடத்தை உனக்குத் தருவேன்,'' **என்று கர்த்தர் மீண்டும் சொல்லுகின்றார்.**

**எப்படி வாழ்ந்தாலும் ஜீவ கிரீடத்தை பெற்றுக்கொள்வோம் என்றால் - பற்றிக்கொள், முடிவு பரியந்தம் நிலைத்திரு, உண்மையுள்ளவனாய் இரு, விசுவாசத்தின் நல்ல போராட்டத்தைப் போராடு, நிலைத்திரு என்பதைப் போன்ற இதர வார்த்தை களுக்கெல்லாம் என்ன தான் அர்த்தம் என்று இந்நேரத்தில் நான் கேட்கிறேன்? ஆண்டவராகிய இயேசு கிறிஸ்துவும், அப்போஸ்தலர்களும் கொடுத்திருக்கும் எச்சரிப்புகளுக்கெல்லாம் எந்த ஒரு பின்விளைவுமே கிடையாது என்றால், பரிசுத்த வேதாகமும், வேத வசனங்களும் வெறும் மாய்மாலமாகவே இருந்துவிடுமே!**

**வெளிப்படுத்தின விசேஷத்தில் கடைசிகால திருச்சபையைக் குறித்து, கர்த்தர் தீர்க்கதரிசனமான ஒரு செய்தியைக் கொடுகின்றார்.** (வெளி 2:11) ''ஆவியானவர் சபைகளுக்குச் சொல்லுகிறதைக் காதுள்ளவன் கேட்கக்கடவன்; ஜெயங்கொள்ளுகிறவன் இரண்டாம் மரணத்தினால் சேதப்படுவதில்லை என்றெழுது.'' **அப்படியென்றால், ஜெயம் கொள்ளாதவர்களுக்கு நிச்சயமாகவே இரண்டாம் மரணம் உண்டு, அதில் எந்த சந்தேகமும் கிடையாது. இது இரட்சிக்கப்படாதவர்களைக் குறித்துச் சொல்ல வில்லை. இரட்சிக்கப்படாதவர்கள் இரண்டாம் மரணத்தில் பங்கடைவார்கள் என்றுதான் நம் எல்லாருக்கும் தெரியுமே! அப்படியென்றால், கடைசிகால திருச்சபையிலே, இந்த "இரட்சிக்கப்பட்டவன், எப்பொழுதும் இரட்சிக்கப்பட்டவன்தான்'' என்பது நிச்சயமாகவே ஒரு வஞ்சகமான உபதேசமாக பரவிவருகிறதென்று கர்த்தர் நமக்கு ஒரு பெரிய வெளிப்பாடைத் தருகின்றார். கேட்கிறதற்கு காதுள்ளவன், இதைக் கேட்கக்கடவன்!**




**இதை வாசிக்கும் கிறிஸ்துவுக்குள் அன்பானவரே, இவைகளை வாசித்த பிறகு நீங்கள் எதை விசுவாசித்து அங்கீகரிக்கிறீர்கள்? உங்கள் திருச்சபைப் பிரிவின் உபதேசத்தையா? கர்த்தருடைய வார்த்தை சொல்லுகின்றதை விசுவாசிப்பதை விட பலர் தங்களுடைய ஸ்தாபனங்களுக்கும், பாஸ்டர்களுடைய நம்பிக்கைக்கும்**

பற்று உள்ளவர்களாக இருப்பது வேதனையாக இருக்கிறது. (எந்த ஒரு ஆட்சேபனையும் இன்றி) கர்த்தருக்கென்று தைரியமாகவும், வெட்கப்படாமலும், இந்த கள்ள உபதேசத்துக்கு நீங்கள் எதிர்த்து நிற்பீர்களா என்பதுதான் கேள்வி. **அதற்காகத்தான், கர்த்தர் முன்னமே இந்த எச்சரிப்பைக் கொடுத்திருக்கின்றார்.** (மாற் 8:38) ‘‘ஆதலால் விபசாரமும் பாவமுமுள்ள இந்தச் சந்ததியில் என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக்குறித்தும் எவன் வெட்கப்படுவானோ, அவனைக் குறித்து மனுஷகுமாரனும் தமது பிதாவின் மகிமைபொருந்தினவராய்ப் பரிசுத்த தூதர்களோடுங்கூட வரும்போது வெட்கப்படுவார் என்றார்’’.

**நான் எதை விசுவாசித்து அங்கீகரிக்கிறேன் என்று சொல்லட்டுமா? பட்சபாதமும், எவ்விதமான வேற்றுமையின் நிழலும் இல்லாத பரிசுத்தமும், அன்புமுள்ள தேவன் எனக்கு தந்திருக்கும் இவ்வளவு பெரிதான இரட்சிப்பு என் வாழ்க்கையில் நிறைவேற பயத்தோடும் நடுக்கத்தோடும் என்னால் இயன்றமட்டும் தினமும் பிரயாசப்பட்டு, கர்த்தருடைய வார்த்தையின்படியே ஜீவிப்பேன். மேலும், இவைகளையெல்லாம் உங்களுடன் பகிர்ந்துகொள்ளுகிற நான்தானே ஆகாதவனாய் போகாதபடிக்கு - கர்த்தர் இன்னும் என்னில் கிரியை செய்துகொண்டிருக்கின்றார்!**

முடிவாக, நன்பர்களே, உங்களுக்கு ஒரு சிறு வீட்டுப் பாடம்:

**(மத்தேயு 7:13,14)**ல் உள்ள மாபெரும் வெளிப்பாடுகளை வெளிப்படுத்தும்படி, நம்முடைய மகா பெரிய தீர்க்கதரிசியும், கர்த்தரும், இராஜாவுமாய் இருக்கிறவரின் வார்த்தைகளை தியானிக்கும்படிக்கு அவருடைய ஆவிக்கு செவிகொடுங்கள்.
**“அநேகர்’’**, **“சிலர்’’** என்று கர்த்தர் யாரைக்குறித்து இந்த புள்ளிவிவரங்களைக் கொடுத்தார்? உலகத்தில் உள்ளவர்களில், மெய்யாகவே இரட்சிக்கப்பட்டவர்களின் புள்ளிவிவரங்களை கர்த்தர் நமக்கு கொடுத்திருக்கின்றாரா? அல்லது - இரட்சிக்கப் பட்டாலும், இடுக்கமான வாசல் வழியாய் செல்வதை விட்டுத் திரும்பி (கிறிஸ்துவை மறுதலித்து), செவித்தினவுள்ளவர்களாய் தங்கள் விருப்பப்படி (வேறொரு கிறிஸ்துவையும்/சுவிசேஷத்தையும்/ஆவியையும்) பிரசங்கிப்பவர்களைக் கேட்கத் துவங்கி விசாலமான வழியில் நடக்கும் (அநேகரை குறித்தும்) - பாடுகள் மத்தியிலும் இடுக்கமான வாசல் வழியாக செல்ல பிரதிஷ்டை செய்திருக்கும், இரட்சிப்பில் நிலைத்திருக்கும், மெய்யான விசுவாசிகளாகிய (சிலரைக் குறித்தும்) நம்முடைய கர்த்தர் கொடுத்திருக்கின்றாரா?

‘‘இடுக்கமான வாசல்வழியாய் உட்பிரவேசியுங்கள்;
**கேட்டுக்குப்** போகிற வாசல் **விரிவும், வழி விசாலமுமாயிருக்கிறது;**
அதின் வழியாய்ப் பிரவேசிக்கிறவர்கள் **அநேகர்.**
**ஜீவனுக்குப்** போகிற வாசல் **இடுக்கமும், வழி நெருக்கமுமாயிருக்கிறது;**
அதைக் கண்டுபிடிக்கிறவர்கள் **சிலர்.**
(மத்தேயு 7:13,14)